بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : பைத்துல் ஹுதா – ஆஸ்திரேலியா**

October 04 2013

**தமிழாக்கம் : மவ்லவி N. ஸியாவுல் ஹக் சாஹிப்**

# ஜல்ஸா ஸாலானா ஆஸ்திரேலியா 2013

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் அருளால் இன்று ஆஸ்திரேலியா அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு தொடங்குகிறது. மேலும் எனக்கு இங்கு நடைபெறக்கூடிய மாநாட்டில் ஏறக்குறைய ஏழு வருடங்களுக்குப் பிறகு கலந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த ஜல்ஸா ஸாலானாக்கள் நடத்துவதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இன்றிலிருந்து ஏறக்குறைய 123 வருடங்களுக்கு முன்பு தொடங்கினார்கள் அல்லது முதல் ஜல்ஸா ஸாலானா இன்றிலிருந்து 123 வருடங்களுக்கு முன்பு நடைபெற்றது எனலாம். இது இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலுள்ள ஒரு சிறிய கிராமமான காதியானில் நடைபெற்றது. அதில் 75 நபர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

இன்று இந்த ஜல்ஸாக்கள் உலகில் மிகப்பெரிய பகுதிகளில் கொண்டாடப்படுகின்றது. இதில் பெரிய நாடுகளும் அடங்கும்; சிறிய நாடுகளும் அடங்கும்; வசதிபடைத்த நாடுகளும் அடங்கும்; ஏழை நாடுகளும் அடங்கும். உலகிலுள்ள பெரிய கண்டங்கள் அனைத்திலும் இந்த ஜல்ஸா நடைபெற்று வருகிறது. நிச்சயமாக இந்த மாநாடுகள் உலகில் மூலை முடுக்குகளிலெல்லாம், நாடுகளிலெல்லாம் நடைபெற வேண்டியிருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பதைப் போன்று இந்த மாநாடுகளை, ஜல்ஸாக்களை சாதாரண மனித மாநாடுகளைப் போன்று கருதாதீர்கள். இது முழுமையான உண்மைக்கு ஆதரவாகவும் இஸ்லாத்தின் பெயரை உயர்த்துவதற்கும் அடிப்படையாக உள்ளது. இந்த ஜமாஅத்தின் அடிக்கல்லை இறைவன் தனது கையினால் வைத்துள்ளான்.

ஆக, உலகில் மாநாடுகள் நடத்துவது மக்களை ஒன்றுதிரட்டு –வதற்காக அல்ல. மாறாக, இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு சான்றாகும். இது அல்லாஹ்வின் ஜமாஅத் உண்மையானது என்பதற்கு சான்றாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பு மிகவும் மகத்தான முறையில் நிறைவேறியதற்கான சான்றாகும். அல்லாஹ்வின் கூற்றாகிய, وَّاٰخَرِیۡنَ مِنۡہُمۡ لَمَّا یَلۡحَقُوۡا بِہِمۡ என்பது மகத்தான அடையாளங்களுடன் நிறைவேறியதற்கான சான்றாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றாகிய இந்த ஜமாஅத்தின் அடிக்கல்லை இறைவன் தனது கையினால் வைத்துள்ளான் என்பது வெறும் கூற்று மட்டும் கிடையாது. மாறாக இன்று இந்த வார்த்தை ஒவ்வொரு நாளும் உதயமாகும் போதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு சான்றாக இறைவனது உதவி மற்றும் ஆதரவின் காட்சிகளை வெளிக்காட்டுகின்றது. மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு ஆதாரங்களைக் கேட்கின்றனர். கண்கள் மூடப்படவில்லையென்றால், உண்மை மற்றும் அறிவில் திரை இல்லையென்றால், அன்னாரின் உண்மைத்துவத்திற்கு உலகில் மூலை முடுக்குகளில் நடைபெறக்கூடிய ஜல்ஸாக்களே மிகப்பெரிய ஆதாரமாகும்.

காதியான் என்ற ஒரு சிறிய கிராமத்தில் 123 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற அந்த மாநாடு, இன்று உலகில் அனைத்து பெரிய கண்டங்களிலும் நடைபெறுகிறது. உலகின் இந்த பெரிய கண்டத்திலும் நடைபெறுகிறது. இந்த பெரிய கண்டத்தின், இந்த பெரிய நாட்டிலுள்ள நகரில் நடைபெறுகிறது. இது காதியானிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் உள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் இதில் கலந்த கொண்டுள்ளனர். இந்த ஜல்ஸா ஏறக்குறை ஒரு மாதத்திற்கு முன்பு மிகவும் மகத்தான முறையில் இந்தியாவில் மிக நீண்ட காலம் வரை ஆட்சி புரிந்து வந்த அந்த அரசின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதன் சில அதிகாரிகள், பாதிரிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது வழக்குகளையும் தொடர்ந்திருந்தனர். அன்னாரை

நீதிமன்றம் வரை வரவழைத்தனர். ஆனால் இன்று அந்த நாட்டின் அரசு அதிகாரிகள், தலைவர்கள் எந்த அளவுக்கு என்றால், அந்த நாட்டின் பாதிரிகளும் கூட அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதை உலகிலுள்ள சமுதாயங்களையும் மக்களையும் ஒன்றுபடுத்தக் கூடிய தூது ஆகும் என்பதையும் இந்த தூதுச் செய்தியை உலகில் பரப்ப வேண்டும் என்பதையும் அவர்களால் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. இதைப் போன்று உலகின் மிகப்பெரிய சக்தியாக கருதப்படக்கூடிய அமெரிக்காவின் அரசும், அதனைச் சார்ந்தவர்களும் நமது ஜல்ஸாக்களுக்கு வந்து, இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தி அஹ்மதிய்யா ஜமாஅத் மூலமாகவே தெரிய வந்துள்ளது எனக் கூறும் கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளனர்.

ஆக, இந்த ஜல்ஸாக்கள், அஹ்மதிகளுக்கு அறிவு மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைகின்ற அதே வேளையில், மற்றவர்களையும் இஸ்லாத்தின் சிறப்புகளை ஏற்றுக் கொள்ளச் செய்கின்றன. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளை இவை உண்மைப்படுத்துகின்றன. இவற்றின் அடிப்டை இறைவனின் உதவியே ஆகும். இவற்றின் நோக்கம் இஸ்லாத்தன் பெயரை உயர்த்துவதாகும். இவை இஸ்லாத்தின் பெயரை உயர்த்துவதை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த ஜல்ஸாக்கள் உலகில் இஸ்லாம் மிகவும் உயர்வான மேன்மையான மார்க்கம் என்பதை நிரூபிக்கக்கூடிய வழியும் ஆகும்.

ஆக இந்த காலத்தில் மற்றவர்களும் கூட அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக வெளிப்படக்கூடிய இஸ்லாத்தின் சிறப்புகளை அதாவது உண்மையான இஸ்லாத்தை – திருக்குர்ஆனின் போதனைகளின்படி உள்ள இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றனர் என்றால், பிறகு அஹ்மதிகளுக்கு தனது பொறுப்புகளைப் பற்றி அதிக அளவு கவனம் ஏற்பட வேண்டாமா? ஓர் அஹ்மதிக்குரிய பொறுப்பு இந்த விசயங்களின் மூலம் பன்மடங்கு அதிகமாகிறது. இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டு இதனை தனது அறிவு, செயல், நம்பிக்கை மற்றும் ஆன்மீகம் ஆகிய நிலைகளைப் பன்மடங்கு அதிகமாவதற்கு வழியாக்குங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜல்ஸாவின் நோக்கங்களைப் பற்றி கூறினார்கள். அதில், இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டு இறையச்சம் மற்றும் இறை வணக்கத்தின் ஒரு முன்மாதிரியாக ஆகுங்கள் என்றார்கள். இந்த ஜல்ஸா உங்களுக்குள் இறையச்சத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். மென்மையான உள்ளம், பரபஸ்பர அன்பு, சகோதரத்துவம் போன்றவற்றில் ஒருவர் மற்றவருக்கு உதாரணமாகத் திகழ வேண்டும். சகோதரத்துவத்தில் ஒரு முன்னுதாரணத்தை நிலைநாட்டுங்கள். தன்னடக்கம், பணிவு ஆகியவற்றை மேற்கொள்ளுங்கள். மார்க்கத் தொண்டிற்காக தனக்குள் ஒரு உணர்வையும், ஆர்வத்தையும் ஏற்படுத்துங்கள். இந்த ஜல்ஸா மூலம் அல்லாஹ்வுடன் ஒரு உயிரோட்டமுள்ள தொடர்பை ஏற்படுத்த முயலுங்கள். இந்த மாநாட்டு நாட்களில் நீங்கள் செய்த பைஅத்தின் நிபந்தனைகைளை ஆய்வு செய்யுங்கள். அதில் இறைவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளுடன், படைப்பினங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளின் பக்கம் கவனம் செலுத்துவதும் அவசியமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

உண்மையான உள்ளத்துடன், மார்க்கக் கட்டளைகளை தனது தலையில் எடுத்துக் கொள்ளாதவருடன் எனக்கு என்ன வேலை இருக்கின்றது?

எனவே இது ஓர் அஹ்மதி செய்ய வேண்டிய மிகப்பெரிய பணியாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு மிகப்பெரிய பணியைக் கொண்டு வந்தார்கள். நாம் அன்னாருடன் செய்த பைஅத்தின் உரிமையை நிறைவேற்ற வேண்டும் என்றால் மேலும் அன்னார் கொண்டு வந்த இந்தப் பணியை நிறைவடையச் செய்ய வேண்டும் என்றால் அன்னார் நமக்கு வழங்கிய போதனைகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் அன்னார் நம்மிடம் வைத்திருந்த அனைத்து எதிர்பார்ப்புகளுடன் முழுமையாகச் செயல்பட முயற்சி செய்ய வேண்டும். நாம் அஹ்மதி ஆகிவிட்டோம். அதனால் நோக்கம் நிறைவேறி விட்டது என ஒருபோதும் நினைக்கக் கூடாது. அஹ்தியான பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் வைத்திருந்த அந்த எதிர்பார்ப்புகளை அந்த விசயங்களை நாம் தேட வேண்டும்.

மாநாட்டின் மூன்று நாட்களும் ஒன்றுபட்ட ரீதியில் ஆன்மீக சூழலைக் கொண்டதாகும். எனவே குறிப்பாக இந்த நாட்களில் அந்த எதிர்பார்ப்புகளைத் தேடியவாறு இங்கு நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் மூலம் பலன்பெற்றவாறு, நாம் ஓர் உண்மையான அஹ்மதி ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதற்காக தன்னை ஆராய வேண்டும். தற்போது நான் உங்கள் முன்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்த்த தரத்தின் பக்கம் வழிகாட்டக்கூடிய பட்டியலில் ஒரு சிலவற்றை எடுத்துக் கூறுவேன். அவர்கள் ஜல்ஸாவின் நோக்கங்களில் ஒன்றாக இதனைக் கூறியுள்ளார்கள். இதன் மூலம் வரக்கூடியவர்களின் உள்ளங்களில் தக்வா ஏற்பட வேண்டும்.

**தக்வா என்பது என்ன? இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தக்வா என்பது சிறிய விசயம் அன்று. இதன் மூலம் மனிதனின் உட்புறமுள்ள ஒவ்வொரு ஆற்றல், சக்திகளின் மீது வெற்றி பெற்றுள்ள அந்த அனைத்து சய்த்தான்களுக்கு எதிராகவும் சண்டையிட வேண்டியுள்ளது. மனிதனுக்குள் இந்த அனைத்து ஆற்றல்களும் *நஃப்ஸே அம்மாரா* என்ற நிலையில் சய்த்தான் ஆகும். *நஃப்ஸே அம்மாரா* என்பது திரும்பத் திரும்ப தீமையின் பக்கம் அழைத்துச் செல்லக்கூடிய நஃப்ஸின் நிலைக்கு கூறப்படும். அது அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கட்டுப்படுவதற்குப் பதிலாக உலகில் சய்த்தான் பரப்பியுள்ள வெட்கங்கெட்ட நிலையின் பக்கம் கவனத்தை ஏற்படுத்தும். தீமைகளை அழகுபடுத்திக் காண்பிக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உங்களை வழிகெடுக்கக் கூடிய இதுதான் மனிதனுடைய சய்த்தான் எனக் கூறுகின்றார்கள்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனை வழிகெடுக்கக்கூடிய இந்த மனித ஆற்றல்கள் சீர்திருந்தவில்லை என்றால், அது பிறகு மனிதனை அடிமையாக்கி விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அறிவும் ஆற்றலும் தவறாகப் பயன்படுத்தப்பட்டு சய்த்தானாக ஆகி விடுகின்றன. சில மனிதர்களுக்கு தனது அறிவின் மீது ஆற்றலின் மீது பெருமை இருக்கும். இந்தப் பெருமையே அவரை சய்த்தானாக ஆக்கி விடும் அல்லது இந்த அறிவும் ஆற்றலுமே சய்த்தான் ஆகி விடும். இறையச்சமுடையோரின் இந்த ஆற்றல்கள் மற்றும் இதுபோன்ற ஏனைய ஆற்றல்களையும் சீர்திருத்த வேண்டும். அதாவது இறைவன் புறமிருந்து கிடைத்த தனது இந்த ஆற்றல்களை சரிசெய்ய வேண்டும். சந்தர்ப்பத்திற்கேற்ப நீதியுடன் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு நடந்தால் பிறகு அது தக்வா – இறையச்சம் ஆகும்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத்திற்கு குறிப்பாக தக்வா உடைய தேவை இருக்கின்றது. மேலும் குறிப்பாக நபி என வாதம் புரிந்தவருடன் தொடர்பு கொண்டுள்ள காரணத்தாலும் அவரது பைஅத்தில் இணைந்திருப்பதாலும் தக்வா குறிப்பாக அவசியமாக இருக்கின்றது. இதன் மூலம் பொறாமை, தப்பெண்ணம், இணை வைத்தல் மற்றும் உலக விரும்பிகளாக இருந்தவர்கள் அந்த அனைத்து துன்பங்களிலிருந்து இரட்சிப்பு பெற வேண்டும்.

ஆக, பைஅத் செய்த பிறகு தூய மாற்றம் ஏற்படவில்லை என்றால் பிறகு பைஅத் செய்த நோக்கம் நிறைவேறாது.

**பிறிதோரிடத்தில் தக்வாவைப் பற்றி விளக்கியவாறு அறிவுரை வழங்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தக்வாவின் வழிகளை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் தக்வாவை மட்டும் தான் முழு சரீஅத்தின் சாராம்சம் எனக் கூற முடியும். சரீஅத்தைச் சுருக்கமாக கூறுவதென்றால் சரீஅத்தின் மையப்புள்ளி தக்வா வாகத்தான் இருக்கும். தக்வாவிற்கு பல தர்ஜாக்களும் பல படித்தரங்களும் உள்ளன. ஆனால் உண்மையைத் தேடக்கூடிய ஒருவராக இருந்து ஆரம்பப் படித்தரங்களைத் தொடர்ந்து பற்றுணர்வுடன் கடக்க வேண்டும். அவ்வாறு செய்யும் போது அவர் இந்த நம்பிக்கை மற்றும் உண்மையின் தேடலினால் உயர்வான தரத்தினை அடைந்து விடுகின்றார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

إِنَّمَا يَتَقَبَّلُ اللّٰهُ مِنَ الْمُتَّقِيْنَ அதாவது *அல்லாஹ் இறையச்சம் உடையோரின் துஆக்களை ஏற்றுக் கொள்கின்றான் (5:28).* இது அவனது வாக்குறுதியாகும். அவனது வாக்குறுதியில் முரண்பாடு இருக்காது.

إِنَّ اللّٰهَ لَا يُخْلِفُ الْمِيْعَادَ *அல்லாஹ் ஒருபோதும் தனது வாக்குறுதியினை மீறமாட்டான். (3:10)*

ஆக, துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தக்வா நிரந்தரமான ஒரு நிபந்தனையாக உள்ளது. பிறகு ஒரு அறிவில்லாத மனிதர் வழி தெரியாமல் துஆ ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என விரும்பினால், அவர் முட்டாள் அல்லது அறிவற்றவர் இல்லையா?

எனவே நமது ஜமாஅத்தினர் முடிந்த அளவு ஒவ்வொருவரும் தக்வாவின் பாதையில் செல்வது கட்டாயமாகும். இதன் மூலம் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான இன்பம் மற்றும் ஆனந்தத்தைப் பெற முடியும். அதிகப்படியான ஈமானில் பங்கு பெற வேண்டும்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் தனது ஆற்றல், சக்திகளைப் பயன்படுத்த வேண்டும். மனிதனுக்கு கொடுக்கப்பட்ட சக்திகளை அவன் பயன்படுத்தினால் நிச்சயமாக அவன் இறைவனின் வலி – நண்பன் ஆக முடியும்.

நான் உறுதியாகக் கூறுகின்றேன்: இந்த உம்மத்தில் பல ஆற்றல்களைக் கொண்டவர்கள் வருகின்றனர். அவர்கள் ஒளி, உண்மை மற்றும் தூய்மையினால் நிறைந்திருப்பார்கள். எனவே எந்த மனிதரும் தன்னை அந்த ஆற்றல்களிலிருந்து தடுக்கப்பட்டவராகக் கருத வேண்டாம். அதன் மூலம் நாம் இந்த அருள்களிலிருந்து பலன்பெற முடியாது எனக் கருதுவதற்கு அல்லாஹ் ஏதாவது பட்டியலை வெளியிட்டிருக்கின்றானா?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் மிகவும் அதிகமாக இரக்கம் காட்டக்கூடியவர் ஆவான். அவனது இரக்கம் ஒரு பெருங்கடல் ஆகும். அது ஒருபோதும் முடிவடையாது. அதனை தேடக்கூடியவர்கள், அதனை விரும்பக்கூடியவர்கள் ஒருபோதும் வீணாக்கப்படுவதில்லை. எனவே நீங்கள் இரவில் எழுந்து துஆக்களைச் செய்யுங்கள். அவனது அருளை வேண்டுங்கள். ஒவ்வொரு தொழுகையிலும் துஆக்கள் செய்வதற்கு பல சந்தர்ப்பங்கள் உள்ளன. ருகூவு செய்யும் போது, நிற்கும் போது, உட்கார்ந்திருக்கும் போது, ஸஜ்தா செய்யும் போது இதுபோன்று பல உள்ளன.

இதைப் போன்று ஐந்து நேரங்கள் தொழப்படுகின்றது. ஃபஜ்ர், ளுஹர், அஸர், மக்ரிப், இசா இவைகளுடன் அஷ்ராக் மற்றும் தஹஜ்ஜுத் தொழுகையும் உள்ளது. இவை அனைத்தும் துஆக்கள் செய்வதற்கான சந்தர்ப்பங்களே ஆகும்.

தொழுகையின் உண்மையான நோக்கம் மற்றும் சாராம்சம் துஆவே ஆகும் என்பதை விளக்கியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொழுகையின் உண்மையான நோக்கம் மற்றும் சாராம்சம் துஆவே ஆகும். துஆ செய்வது அல்லாஹ்வின் இயற்கைச் சட்டத்திற்கேற்ப உள்ளதாகும். நாம் பொதுவாக இதனைப் பார்க்கின்றோம். அதாவது குழந்தை அழும் போது, கண்ணீர் விடும் போது, தாய் எந்த அளவு துடிப்புடன் சென்று அதற்கு பால் தருகின்றாள். உலூஹிய்யத் மற்றும் உபூதிய்யத்தில் இதுபோன்ற தொடர்பு தான் உள்ளது.

அதாவது அல்லாஹ் மற்றும் அடியானுக்கு இடையில் இப்படிப்பட்ட ஒரு தொடர்பு தான் உள்ளது. இதனை அனைவராலும் புரிந்து கொள்ள முடியாது. மனிதன் ஆல்லாஹ்வின் வாசலில் விழும் போது, மிகவும் பணிவுடன், அழுது மன்றாடியவாறு தனது நிலையை அவன் முன் வைக்கும் போது அவனிடம் தனது தேவையைக் கேட்கும் போது பிறகு இறைவனது கருணை உணர்வு பொங்கி எழுந்து பிறகு அந்த மனிதர் மீது கருணை காட்டப்படும். அல்லாஹ்வின் அருள் ஒரு பணிவை வேண்டுகிறது. எனவே அவனுக்கு முன்பு அழக்கூடிய கண்களை வைக்க வேண்டும்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் முன் அழுவதன் மூலம், மன்றாடுவதன் மூலம் எதுவும் கிடைக்காது என சிலர் கருதுகின்றனர்.

இன்றைய நாட்களில் நாத்திகம் இளைஞர்களிடமும் சில மக்களிடமும் இதுபோன்ற எண்ணங்களை மிகவும் அதிகமாக உருவாக்குகின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் முன்பு அழுவதன், மன்றாடுவதன் மூலம் எதுவும் கிடைக்காது எனக் கூறுகின்றனர். இது முற்றிலும் தவறானதும் பொய்யானதும் ஆகும். இப்படிப்பட்ட மக்கள் அல்லாஹ்வின் இருப்பின் மீதும் அவனது பண்புகள் மீதும் அவனது வல்லமை மற்றும் ஆற்றல் மீதும் நம்பிக்கை இல்லாதவர்கள் ஆவார்கள். அவர்களிடம் உண்மையான ஈமான் இருக்கும் என்றால் அவ்வாறு கூறுவதற்கு அவர்களுக்கு தைரியம் வந்திருக்காது. ஒருவர் அல்லாஹ்விடம் உண்மையான தவ்பா (பாவமன்னிப்பு) உடன் வந்திருந்தால் உண்மையான தவ்பா நிபந்தனையாகும். அல்லாஹ் கொடுத்த பணிகளை கடைபிடித்து வர வேண்டும். அவ்வாறு உண்மையான தவ்பா செய்து வரக்கூடியவர் மீது அல்லாஹ் எப்போதும் அருள் பொழிந்து கொண்டிருக்கிறான்.

யாரோ ஒருவர் உண்மையாகத்தான் கூறியிருக்கிறார்: இந்த அன்பு செலுத்தக் கூடியவர் எப்படிப்பட்டவர் ஆவார். இவரது நண்பர் இவரது நிலையைப் பார்க்கக்கூட இல்லை. ஆனால் மருத்துவர் இருக்கிறார். நண்பரே! வேதனை எங்கே உள்ளது? உங்களிடம் அந்த வேதனை ஏற்படவில்லை. ஆனால் சிகிச்சை அளிப்பதற்கு அல்லாஹ் தயாராக இருக்கின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் தூய உள்ளத்துடன் வர வேண்டும் என இறைவன் விரும்புகின்றான். அதற்கு அவனுக்கேற்ப தன்னை ஆக்கிக் கொள்வது நிபந்தனையாகும். இறைவனிடம் செல்ல தகுதியாக்கக்கூடிய உண்மையான மாற்றத்தை தனக்குள் ஏற்படுத்திக் காட்டுங்கள். நான் உங்களிடம் உண்மையாகவே கூறுகின்றேன். இறைவனிடம் பல அபூர்வமான வல்லமைகள் உள்ளன. அதில் எண்ணிலடங்கா அருள்களும் உள்ளன. அதனைப் பார்ப்பதற்கும், அடைவதற்கும் அன்பிற்குரிய கண்களை உண்டாக்குங்கள். உண்மையான அன்பு இருக்கும் என்றால், இறைவன் துஆக்களை அதிகமாக கேட்கக்கூடியவனும் உதவிபுரியக் கூடியவனும் ஆவான்.

**தன்னடக்கம் மற்றும் பணிவின் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:**

இறையச்சமுடையவருக்குரிய முதல் நிபந்தனை அவர் தனது வாழ்வை ஏழ்மையாகவும், எளிமையாகவும் கழிக்க வேண்டும். இது தக்வாவின் ஒரு பகுதி ஆகும். இதன் மூலம் அனுமதிக்கப்படாத கோபத்துடன் போட்டியிட வேண்டும். மிகப்பெரிய அறிஞர்களுக்கும் உண்மையாளர்களுக்கும் கடைசி மற்றும் கடுமையான நிலை கோபத்திலிருந்து தவிர்ந்திருப்பதாகும். ஆணவமும், தற்பெருமையும் கோபத்தினால் வருகிறது. இதுபோன்றே கோபமும் ஆணவத்தினால் உண்டாகிறது. ஆணவம் தற்பெருமையினால் உண்டாகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் தன்னை மற்றவர் மீது மேன்மைப்படுத்தும் போதுதான் கோபம் வருகிறது. அப்போது மனிதன் தன்னை ஒரு பொருட்டாகக் கருத ஆரம்பித்து விடுகின்றான். எனது ஜமாஅத்தினர் பரஸ்பரம் ஒருவர் மற்றவரை சிறியவர் என்றோ பெரியவர் என்றோ கருதக்கூடாது. ஒருவர் மற்றவர் மீது தற்பெருமை கொள்ளக் கூடாது. தரக்குறைவான பார்வையில் பார்க்கக் கூடாது. அதாவது தன்னை விட குறைவானவராகக் கருதக் கூடாது என நான் விரும்புகின்றேன்.

இறைவன் யார் பெரியவர்? யார் சிறியவர்? என்பதை அறிவான். இது ஒருவகையான பிறரை அற்பமாகக் கருதுவது ஆகும். இதற்குள் ஏளனம் உள்ளது. இந்த ஏளனம் விதையைப் போன்று வளர்ந்து அவனது அழிவிற்குக் காரணமாக அமைந்து விடக் கூடாது என்ற அச்சம் உள்ளது. இந்த ஏளனத்தை உள்ளத்தில் வைத்திருந்தால் விதை விதைக்கப்பட்ட பின் அது வளர்ந்து செடியாகி, மரமாகி விடுவதைப் போன்றே ஏளனமும் வளரும். பிறகு இறுதியில் அது மனிதனை அழித்து விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சில மனிதர்கள் பெரியவர்களை சந்திக்கும் போது மிகவும் மரியாதையுடன் நடப்பார்கள். மிகவும் அழகிய ஒழுக்கத்தை வெளிப்படுத்துவார்கள். ஆனால் பெரியவர் யார் என்றால், எளியவரின் விசயங்களை எளிமையுடன் கேட்பவரும், அவருக்கு ஆறுதல் வழங்குபவரும், அவரது வார்த்தைக்குக் கண்ணியம் அளிப்பவரும், துக்கம் ஏற்படக்கூடிய எந்தவிதமான கடினமான வார்த்தைகளையும் கூறாதவருமே பெரியவர் ஆவார்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

وَلَا تَنَابَزُوا بِالْأَلْقَابِ ۖ بِئْسَ الِاسْمُ الْفُسُوقُ بَعْدَ الْإِيمَانِ ۚ وَمَن لَّمْ يَتُبْ
فَأُولَٰئِكَ هُمُ الظَّالِمُونَ ۝ (49:12)

நீங்கள் ஒருவர் மற்றவரை பட்டப்பெயர் சூட்டி அழைக்காதீர்கள். இது தீயவர்களின் செயலாகும். இது மார்க்கத்தை விட்டு விலக்கிச் செல்பவர்களின் செயலாகும். எவர் ஒருவர் மற்றவரை கேலி செய்வாரோ அவர் அவ்வாறு ஆகாதவரை மரணிக்கமாட்டார். தனது சகோதரரை இழிவடைந்தவராகக் கருதாதீர்கள். ஒரே நீரூற்றிலிருந்து எல்லாரும் பருகும்போது யாருடைய அதிர்ஷ்டத்தில் அதிகமாக தண்ணீர் குடிப்பது உள்ளது என்று யார் அறிவார்? நாம் அனைவரும் அல்லாஹ்வின் அடியார்கள் ஆவோம். அவனது அருள்தான் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். பிறகு அல்லாஹ்வின் அருள் யார் மீது அதிகம் இருக்கும் என்பதை யார் அறிவார்? உலகச் செல்வங்களைப் பெறுவதில் யாரும்

கண்ணியத்திற்குரியவராகவும் மேன்மைக்குரியவராகவும் ஆகி விட முடியாது. இறைவனது பார்வையில் இறையச்சமுடையோரே கண்ணியமிக்கவர் ஆவார்.

(49:14) إِنَّ أَكْرَمَكُمْ عِندَ اللَّهِ أَتْقَاكُمْ ۚ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ

**ஒரு சந்தர்ப்பத்தில் ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியவாறு அன்னார் கூறினார்கள்:**

நல்லடியார்களைத் தவிர அல்லாஹ் வேறு யாரைப் பற்றியும் கவலையடைய மாட்டான். பரஸ்பரம் அன்பையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துங்கள். காட்டுமிராண்டித் தனத்தையும் கருத்து வேறுபாட்டையும் விட்டு விடுங்கள். எல்லா விதமான கேலி கிண்டல்களிலிருந்தும் விலகியிருங்கள். ஏனென்றால் ஏளனம் செய்வது, உண்மையை மனிதனது உள்ளத்திலிருந்து விலக்கி எங்கேயோ கொண்டு சேர்த்து விடும். பரஸ்பர கண்ணியத்துடன் பழகுங்கள். ஒவ்வொருவரும் தனது சுகத்தை விட தனது சகோதரனுடைய சுகத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இது மிகப்பெரிய விசயமாகும்.

அல்லாஹ்வுடன் ஓர் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுடன் எந்த விதமான சண்டை கிடையாது. அல்லாஹ்வுடன் உண்மையான சமாதானம் என்பது அவனது கட்டளைகளின்படி செயல்படுவது, அவனது இபாதத்திற்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும். அவனது அடியார்களின் உரிமைகளைக் கொடுக்க வேண்டும் என்பதாகும். அவனுக்குக் கட்டுப்பட்டவாறு திரும்பி விடுங்கள். அல்லாஹ்வின் கோபம் பூமியின் மீது விழுகிறது. முழுமையான முறையில் தனது அனைத்து பாவங்களுக்கும் பாவமன்னிப்பு வேண்டியவாறு அவனிடம் வருபவரே அதிலிருந்து பாதுகாப்பாக இருக்கக்கூடியவர் ஆவார்.

நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வுடைய கூற்றின்படி நீங்கள் செயல்பட்டால் அவனது மார்க்கத்திற்காக பணியாற்றக்கூடியவராக ஆவதற்கு நீங்கள் முயற்சி செய்தால், பிறகு இறைவன் அனைத்து தடைகளையும் அகற்றி விடுவான். நீங்கள் வெற்றிபெற்றவர்களாகி விடுவீர்கள்.

நீங்கள் பார்த்ததில்லையா? விவசாயி நல்ல விளைச்சலுக்காக வயலில் உள்ள வீணானவற்றை புற்பூண்டுகளை அகற்றி விடுவார். மேலும் தனது வயலை அழகான மரங்கள் மற்றும் கனிகள் தரக்கூடிய செடிகளைக் கொண்டு அழகுபடுத்துவார். அதனைப் பாதுகாப்பார். அனைத்து வித தீங்கிலிருந்தும் அழிவிலிருந்தும் அதனை பாதுகாப்பார். ஆனால் கனி தராத காய்ந்த மரம் மற்றும் செடிகளைப் பற்றி அது அழிந்து போனாலும் காய்ந்து போனாலும் அதனைப் பற்றி தோட்டக்காரர் கவலையடைய மாட்டார். ஏதாவது விலங்கு வந்து அதனை சாப்பிட்டாலும் அல்லது ஏதாவது ஒரு மரவெட்டி அதனை வெட்டி நெருப்பில் போட்டாலும் அதனைப் பற்றி அந்த தோட்டக்காரர் கவலை அடையமாட்டார். இவ்வாறே நீங்களும் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் அல்லாஹ்வின் பார்வையில் உண்மையாளர் ஆகிவிட்டீர்கள் என்றால், யாருடைய பகைமையும் உங்களுக்கு துன்பம் தராது. ஆனால் நீங்கள் உங்களது நிலையை சரிசெய்யவில்லை என்றால் அல்லாஹ்வுடன் கட்டுப்படுதலுக்கான ஓர் உண்மையான உறுதிமொழியை எடுக்கவில்லை என்றால் பிறகு அல்லாஹ் யாரைப் பற்றியும் கவலைப்பட மாட்டான்.

ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான ஆடுகள் அறுக்கப்படுகின்றன. ஆனால் அதன் மீது யாரும் இரக்கம் காட்டுவதில்லை. ஆனால் ஒரு மனிதர் கொல்லப்பட்டால் எந்த அளவு விசாரிக்கப்படுகிறது! மனிதன் கொல்லப்பட்டால் விசாரணை நடைபெறுகிறது. சட்டம் கேள்வி கேட்கிறது. ஆனால் விலங்குகள் அறுக்கப்படுகின்ற போது அதன் மீது யாரும் இரக்கம் காட்டுவதில்லை.

ஆக நீங்கள் உங்களை விலங்குகளைப் போன்று வீணாக, கவனமற்றதாக ஆக்கிக் கொண்டீர்கள் என்றால் பிறகு உங்களது நிலையும் அவ்வாறானதாகவே ஆகிவிடும். எனவே நீங்கள் இறைவனது அன்பிற்குரியவராகி விடுங்கள். இதன் மூலம் எந்தவித தொல்லைக்கும் துன்பத்திற்கும் உங்களை அணுக தைரியம் வரக்கூடாது. அல்லாஹ்வின் அனுமதி இல்லாமல் எந்த விசயமும் பூமியில் நடைபெறாது. ஒவ்வொருவரும் தமக்கிடையில் இருக்கும் சண்டை, வெறுப்பு, பகைமை போன்றவற்றைக் களையுங்கள். நீங்கள் சின்னச் சின்ன விசயங்களை விட்டு விட்டு, மிகவும் முக்கியமான மகத்துவமான விசயத்தின் பக்கம் தம்மை முழுமையாக ஈடுபடுத்துங்கள். இது எனது வஸிய்யத் ஆகும். இந்த விசயத்தை எனது வஸிய்யத் ஆக நினைவில் கொள்ளுங்கள். பிறருடன் ஒருபோதும் விரைவாகவும் கடினமாகவும் நடந்து கொள்ளாதீர்கள். மாறாக மெதுவாகவும் மென்மையாகவும் பணிவுடனும் ஒருவரையொருவர் புரிய வையுங்கள்.

**அடுத்து ஜமாஅத்திற்கு ஒழுக்க மேம்பாட்டின் பக்கம் கவனம் செலுத்தியவாறு அன்னார் கூறினார்கள்:**

நமது ஜமாஅத்திற்கு ஒழுக்கத்தில் முன்னேறுவது அவசியமானதாகும். ஏனென்றால், *அல் இஸ்திகாமத் ஃபவ்கல் கராமத்தி* உறுதியாக நிலைநிற்றல் அற்புதத்தை விட மேலானதாகும் என்பது புகழ்பெற்ற விசயமாகும். நினைவில் கொள்ளுங்கள். யாராவது உங்கள் மீது கடினத்தை மேற்கொண்டால் முடிந்த அளவு அதற்கு மென்மை

மற்றும் பணிவுடன் பதில் தாருங்கள். தீவிரவாதம் மற்றும் கட்டாயப்படுத்துவதை பதில் கொடுக்கக்கூடிய நிலையில் கூட கையாளாதீர்கள். நாம் உலகிற்கு இந்தப் பாடத்தைத் தான் கொடுக்கின்றோம். இதுதான் உலகில் அமைதியினை ஏற்படுத்துவதற்கான வழியாகும் எனக் கூறும் போது உலகமும் இதனை விரும்புகிறது. ஆனால் நமது செயல் முன்மாதிரியும் இவ்வாறு இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனிடம் நஃப்ஸும் இருக்கின்றது. அது மூன்று வகைப்படும். அவை அம்மாரா, லவ்வாமா, முத்மயின்னா என்பதாகும். அம்மாரா உடைய நிலையில் மனிதன் உணர்வு மற்றும் எழுச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாது. இதைப் பற்றி நான் ஏற்கனவே கூறினேன். அதில் தனது விருப்பத்திற்கேற்ப செயல்படுவார். மேலும் நல்லொழுக்க நிலையில் இருந்தும் விழுந்து விடுவார். ஆனால் லவ்வாமா உடைய நிலையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வார். அவரது உள்ளம் நான் தீங்கு செய்துள்ளேன் எனத் திரும்பத்திரும்ப குற்றம்சாட்டிக் கொண்டே இருக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்கூறுகின்றார்கள்:**

எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. இதனை சஅதி, போஸ்தானில் எழுதியுள்ளார். ஒரு பெரியவரை நாய் ஒன்று கடித்தது. அவர் வீட்டிற்கு வந்தார். வீட்டில் உள்ளவர்கள் அவர் நாயினால் கடித்ததைக் கண்டனர். ஒரு சின்னஞ்சிறிய பெண் பிள்ளையும் வீட்டில் இருந்தது. அவள் நீங்கள் ஏன் நாயை கடிக்கவில்லை எனக் கேட்டாள். அதற்கு அவர், மனிதரிடம் நாயின் பண்பு இருக்காது எனக் கூறினார். இதைப் போன்றே மனிதனும் இருக்க வேண்டும். அதாவது ஏதாவது ஒரு தீயவன் ஏசிப்பேசினால் மூஃமின் கண்டிப்பாக அதனைக் கண்டும் காணாமல் விட்டு விட வேண்டும். இல்லையென்றால் அதே நாய் உடைய பண்பின் உதாரணமே இங்கும் பொருந்தி விடும்.

இறை நெருக்கத்தைப் பெற்றவர்கள் ஏசிப்பேசப்பட்டுள்ளனர். மிகவும் கடுமையான முறையில் கஷ்டப்பட்டுள்ளனர். ஆனால் وَاَعْرِضْ عَنِ الْجٰهِلِيْنَ அவர்கள் அறிவீனர்களிடமிருந்து விலகியே இருப்பவர்கள் என்ற பட்டம் கிடைத்தது. நமது நபி (ஸல) அவாகள இன்ஸானே காமில் அதாவது முழுமை பெற்ற மனிதர் ஆவார். அவர்களுக்கு மிகவும் மோசமான துன்பங்களும் இழைக்கப்பட்டன. அன்னாரைப் பற்றி மக்கள் இழிவான வார்த்தைகளையே கூறி வந்தனர். ஆனால் நல்லொழுக்கத்தின் முழு வடிவமாகத் திகழ்ந்த ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்ன செய்தார்கள்? அந்த தீயவர்களுக்காக துஆ செய்தார்கள். ஏனென்றால் அல்லாஹ் நீர் அறீவீனர்களிடமிருந்து விலகி இருந்தால், நாம் உமது உயிரையும் கண்ணியத்தையும் பாதுகாப்போம். இந்த உலகவாதிகளால் உங்கள் மீது தாக்குதல் நடத்த முடியாது என வாக்குறுதி அளித்திருந்தான். அவ்வாறே நடக்கவும் செய்தது. ஹுஸூர் உடைய எதிரிகளால் அன்னாருடைய கண்ணியத்திற்கு பங்கம் ஏற்படுத்த முடியவில்லை. எதிரிகள் தானே இழிவடைந்து அன்னாருடைய காலடியில் விழுந்தனர். அல்லது அன்னாரது கண் முன்னே அழிந்து போனார்கள்.

ஆக, இது லவ்வாமா உடைய பண்பு ஆகும். இதில் மனிதன் குழப்பத்திலும் தன்னைச் சீர்திருத்திக் கொள்வான். இது தினசரி விசயமாகும். ஏதாவது அறிவீனர், தீயவன் ஏசினால் அல்லது யாராவது வம்பு செய்தால் எந்த அளவு அவர்களிடமிருந்து விலகி இருப்பீர்களோ அதே அளவு கண்ணியத்தைப் பாதுகாப்பீர்கள். மேலும் எந்த அளவு அவருடன், சண்டையிடுவீர்களோ போட்டியிடுவீர்களோ அதே அளவு அழிந்தும் போவீர்கள். இழிவும் அடைவீர்கள். நஃப்ஸே முத்மயின்னா உடைய நிலையில் மனிதனுடைய நிலை நன்மைகளாகவும் தியாகங்களாகவும் ஆகி விடும். அல்லாஹ்வைத் தவிர மற்ற அனைத்தையும் விட்டு விடுவார்கள். அவர்கள் உலகில் திரிந்து உலக மக்களை சந்திப்பார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் இங்கு இருப்பதில்லை. அவர்கள் இருக்கும் உலகம் வேறொரு உலகமாக இருக்கும். அங்குள்ள வானமும், பூமியும் வேறொன்றாக இருக்கும். இதுபோன்ற புதிய வானத்தையும் புதிய பூமியையும் ஏற்படுத்துவதற்காகத் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வருகை தந்தார்கள்.

நம்மில் ஒவ்வொருவரும் தனது நஃப்ஸை கட்டுப்படுத்தக் கூடியவராக இருக்க வேண்டும். நாம் நமது தொடர்பில் அன்பு மற்றும் நேசத்தில் எந்த அளவு முன்னேறக்கூடியவர்களாக இருப்போமா அங்கு தப்லீகிற்கான பல வழிகள் திறக்கலாம்.

வருத்தத்துடன் கூற வேண்டியுள்ளது. சில மக்கள் சின்னச்சின்ன விசயத்திற்குக் கூட சண்டையிட ஆரம்பித்து விடுகின்றனர். மாநாடுகளிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன. இவை அனைத்தும் ஜல்ஸா உடைய புனிதத்தை பாழாக்கக் கூடியதாக இருக்கிறது. எனக்கு இங்கிருந்து கூட சில புகார்கள் வந்துள்ளன. வெளியில் சென்ற போது, பார்கிங் சென்ற போது சண்டை ஏற்படுகின்றது. பழைய பகை இருந்தது. குடும்ப பகை அல்லது வியாபாரப்

பகை இருந்தது. அதன் மீது சண்டையிடுகின்றனர். இதன் மூலம் ஜல்ஸா உடைய நோக்கம் மற்றும் புனிதத்தன்மையை பாழாக்குகின்றனர். அல்லது வெளியே சென்றவுடன் நாம் எதற்காக வந்திருக்கின்றோம். என்ன செய்து விட்டுச் செல்கின்றோம் என்பதை மறந்து விடுகின்றனர். ஆக மற்றவர்கள் முன்னிலையில் மட்டும் பொறுமை, சகிப்புத்தன்மையை மேற்கொள்ள வேண்டும் என்று போதனை வழங்கப்படவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றவர்கள் முன்னிலையில் மட்டும் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை மேற்கொள்ளுங்கள் என்று கூறவில்லை. திருக்குர்ஆன்
அன்பு மற்றும் கருணையை தமக்கிடையில் ஏற்படுத்துங்கள். முன்பை விட அதிகமாக ஏற்படுத்துங்கள். மற்றவர்களிடம் காட்டுவதை விட அதிகமாக அன்பு காட்டுங்கள்.

இதைப் பற்றி மிகவும் அதிகமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் நம்மில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். பிறகு அன்னாரது ஜமாஅத்தில் இணைந்து அன்னாருடைய போதனைகளின்படி செயல்பட முயற்சி செய்பவர்களுக்கு நற்செய்தி வழங்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

وَجَاعِلُ الَّذِينَ اتَّبَعُوكَ فَوْقَ الَّذِينَ كَفَرُوا إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ இந்த ஆறுதலுக்குரிய வாக்குறுதி நாசரேத்தில் பிறந்த இப்னு மர்யமிடம் வழங்கப்பட்டதாகும். ஆனால் நான் உங்களுக்கு நற்செய்தியை வழங்குகின்றேன். மஸீஹ் இயேசு உடைய பெயரில் வரக்கூடிய இப்னு மர்யமுக்கும் அல்லாஹ் இதே வார்த்தையைக் கூறித்தான் நற்செய்தியை வழங்கி இருக்கின்றான்.

ஆக நீங்கள் சிந்தனை செய்யுங்கள். என்னுடன் தொடர்பு கொண்டு இந்த மிகப்பெரிய வாக்குறுதி மற்றும் மிகப்பெரிய நற்செய்தியுடன் இணைய விரும்புகின்றீர்கள் என்றால் அவர்கள் அம்மாரா உடைய நிலையில் இருக்கக்கூடிய மக்களாக இருக்க முடியுமா? தீமையில் நிலைத்திருக்கக்கூடிய மக்களாக இருக்க முடியுமா? முடியாது. ஒருபோதும் முடியாது.

அல்லாஹ் உடைய இந்த வாக்குறுதி உண்மையான கண்ணியம் அளிக்கக்கூடிய மக்கள் என்னுடைய விசயங்களை கதைகளைப் போன்று கருதாதவர்கள் நினைவில் கொள்ளுங்கள். உள்ளத்தில் கேளுங்கள். நான் மீண்டும் ஒருமுறை என்னுடன் தொடர்பு கொண்டவர்களை நோக்கி கூறுகின்றேன். அந்த தொடர்பு ஒரு சாதாரண தொடர்பு கிடையாது. மாறாக இது ஒரு உறுதியான தொடர்பாகும். இது எப்படிப்பட்ட தொடர்பு என்றால் இதன் தாக்கம் எனக்கு மட்டும் கிடைப்பதில்லை. மாறாக உலகில் உண்மை மற்றும் சத்தியத்தின் ஆன்மாவைக் கொண்டு வந்த அந்த தூய மாநபி வரை சென்றடைகிறது.

இந்த விசயங்களின் தாக்கம் எனக்கு மட்டும் கிடைப்பதாக இருந்தால் இதைப் பற்றி எந்த விதமான வருத்தமும் கவலையும் அடைந்திருக்க மாட்டேன். ஆனால் இது இங்கு வரை நின்று விடவில்லை. மாறாக இதன் தாக்கம் நமது நபி (ஸல்) அவர்கள் வரை, மேலும் இறைவன் வரை சென்றடைகிறது.

ஆக இப்படிப்பட்ட நிலையில் மிகவும் கவனத்துடன் கேளுங்கள். நீங்கள் இந்த நற்செய்தியிலிருந்து பங்குபெற விரும்பினால் அதற்குரியவராக ஆக விரும்பினால் இவ்வளவு பெரிய வெற்றி அதாவது காஃபிர்கள் மீது மறுமை நாள் வரை வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்ற தாகம் உங்களுக்கு இருக்கும் என்றால் நான் இதனை மட்டும் கூறிக் கொள்கிறேன். இந்த வெற்றி லவ்வாமா உடைய நிலையிலிருந்து கடந்து முத்மயின்னா உடைய மினரா வரை சென்றடையாத வரை கிடைக்காது. நான் இதனை விட அதிகமாக வேறெதுவும் கூறப்போவதில்லை. நீங்கள் இறைவன் புறமிருந்து வந்துள்ள நபருடன் தொடர்பை ஏற்படுத்தி உள்ளீர்கள். காதுகளால் கேளுங்கள். அதன்படி செயல்படுவதற்கு எப்போதும் தயாராக இருங்கள். ஏற்றுக் கொண்ட பிறகு நிராகரித்த மக்களுடன் சேர்ந்து நிரந்தரமான தண்டனையைப் பெற்றவர்களைப் போன்று நீங்கள் ஆகி விடாதீர்கள்.

**மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:** அல்லாஹ்வுடன் சீர்திருத்தம் வேண்டுவது மற்றும் தனது ஆற்றல்களைச் செலவழிப்பது தான் ஈமானின் பாதைகள் ஆகும்.

ஹதீஸில் வருகிறது. எவர் உறுதியுடன் துஆவுக்காக தனது கைகளை உயர்த்துவாரோ அல்லாஹ் அப்படிப்பட்டவருடைய துஆவை மறுக்கமாட்டான்.

எனவே இறைவனிடம் வேண்டுங்கள். உறுதியுடன் உண்மையான உள்ளத்துடன் வேண்டுங்கள். எனது அறிவுரை மீண்டும் இதுவே ஆகும். அதாவது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதே தனது அற்புதத்தை வெளிப்படுத்துவதாகும். நான் அற்புதங்களை வெளிப்படுத்தக் கூடியவனாக ஆக விரும்பவில்லை என ஒருவர் கூறினால் நினைவில் கொள்ளுங்கள். சய்த்தான் அவரை ஏமாற்றுகின்றான். கராமத் என்றால் ஆணவம்

தற்பெருமை என பொருள் கிடையாது. மாறாக கராமத் மூலம் மக்களுக்கு உண்மை மற்றும் சத்தியம் வெளிப்படும். மேலும் நேர்வழி கிடைக்கும். மீண்டும் நான் உங்களிடம் கூறுகின்றேன்.

ஆணவம், தற்பெருமை போன்றவை கராமத்தில் – அற்புதத்தில் அடங்காது. இது சய்த்தானிய வழிகேடல் ஆகும். பாருங்கள்! உலகில் பல்வேறு பகுதிகளில் தென்படக்கூடிய கோடிக்கணக்கான முஸ்லிம்கள் வாளின் தாக்கத்தினால் அல்லது வலுக்கட்டாயமாகவா முஸ்லிம் ஆனார்கள்? இல்லை. இது முற்றிலும் தவறாகும். இஸ்லாத்தின் கராமாத்துகள் அற்புதங்கள் தான் இவர்களை இஸ்லாத்தின் பக்கம் கொண்டு வந்தன.

கராமத்தில் பல வகைகள், பல பிரிவுகள் உள்ளன. இதில் ஒன்று, நல்லொழுக்க கராமத் ஆகும். இது ஒவ்வொரு மைதானத்திலும் வெற்றி பெறக்கூடியதாகும். நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துங்கள். பிறகு இதுவே கராம் – அற்புதம் ஆகி விடும். முஸ்லிம் ஆனவர்கள் உண்மையாளர்களின் கராமத்துகளை – அற்புதங்களை மட்டுமே பார்த்தனர். அதன் தாக்கம் தான் அவர்கள் மீது ஏற்பட்டது. அவர்கள் இஸ்லாத்தைக் கண்ணியத்துடன் பார்த்தார்கள். அவர்கள் வாளைப் பார்க்கவில்லை. மிகப்பெரிய பெரிய அறிஞர்களுக்கு இந்த விசயத்தை ஒப்புக் கொள்ள வேண்டியது வந்தது. அதாவது, இஸ்லாத்தின் உண்மையான ஆன்மா எவ்வளவு உறுதியானது என்றால் அது ஏனைய சமுதாயங்களை இஸ்லாத்தின் பால் வருவதற்கு கட்டாயப்படுத்தியது.

ஆக போதனைகளுக்கேற்ப உங்களது அமல்கள் இருந்தால் நமது ஒவ்வொரு சொல்லும் செயலும் திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப இருந்தால், மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்த்ததைப் போன்று இருந்தால் பிறகு இது தப்லீகிற்கான மிகப்பெரிய வழியாக அமைந்து விடும்.

பாகிஸ்தானியர்களில் அல்லது ஃபிஜியைச் சேர்ந்தவர்களில் எண்ணிக்கை அதிகமாவதால் மட்டும் அஹ்மதிய்யத் பரவி விடாது. மாறாக உள்ளூர் மக்களிடம் தப்லீக் செய்வதற்கு மக்களது கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் நமது அமல்களை அமைத்துக் கொள்ள வேண்டும். இதுவும் ஜல்ஸாவின் மாபெரும் நோக்கமாகும்.

ஆக இறையச்சத்தில் முன்னேறுவது உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவது அல்லாஹ்வுடன் தொடர்பு, துஆக்கள் மற்றும் தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்துவது போன்றவைகள்தான் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட முறையிலும் பலன் தரக்கூடியதாக இருக்கும். ஜமாஅத் என்ற ரீதியிலும் ஜமாஅத்திற்கும் பலன் தரக்கூடியதாக இருக்கும். ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் இந்த தரத்தை அடைய முயற்சி செய்யக்கூடிய ஒவ்வொருவரையும் இது இணைக்கும்.

ஜல்ஸா உடைய இந்த சூழலில் இந்த நாட்களில் தன்னை ஆய்வு செய்யுங்கள். ஒவ்வொரு அஹ்மதியும் தன்னை ஆராய வேண்டிய அவசியம் உள்ளது. அதாவது நாம் எந்த அளவு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கிய அறிவுரை மற்றும் எதிர்பார்ப்புகளின் படி செயல்பட முயற்சி செய்கின்றோம் என்பதைப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். நாம் இந்த விசயங்களின் படி செயல்பட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது ஜமாஅத்திற்காக செய்த துஆக்களுக்கும் வாரிசாக வேண்டும்.

இந்த நாட்களில் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ்வின் கருணைக்கு நன்றி செலுத்துங்கள். அவன் நமக்கு ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கி நமது சீர்திருத்தத்திற்காக மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளான். நாம் அல்லாஹ்வின் அருளிலிருந்து பலன் பெறாத மக்களைப் போன்று ஆகிவிடக் கூடாது என்பதற்காக துஆ செய்யுங்கள். மேலும் அல்லாஹ்வின் அருளை பெறக்கூடிய மக்களில் நாமும் இணைய வேண்டும் என துஆ செய்யுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! நாம் இந்த நாட்களிலிருந்து முழுமையாக பலன் பெறக்கூடியவர்களாக ஆக வேண்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆக்களுக்கு வாரிசாக வேண்டும்.

தொழுகைகளுக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். இது கண்ணியத்திற்குரிய சாஹிப் ஸாதி அமத்துர் ரஷீத் பேகம் சாஹிபா உடைய ஜனாஸா ஆகும். இவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மற்றும் ஸய்யிதா அமத்துல் ஹை பேகம் சாஹிபா உடைய மகள் ஆவார்கள். கண்ணியத்திற்குரிய மர்ஹூம் மியான் அப்துர் ரஹீம் அஹ்மது சாஹிபுடைய மனைவி ஆவார்கள்.

இவர் செப்டம்பர் 30 ஆம் தேதி மேரிலேண்டில் தனது 95 வயதில் மரணமடைந்துள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பேத்தி ஆவார்கள். மேலும் நான் கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகள் ஆவார்கள். இதைப் போன்று ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் மற்றும் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய சகோதரி ஆவார்கள். என்னுடைய சிறிய தாய் ஆவார்கள். முதல் கலீஃபத்துல் மஸீஹ் முதல் தற்போது வரை இவர்களுக்கு எல்லா கலீஃபாக்களுடன் தொடர்பு இருந்து வந்துள்ளது. எனக்கு இவர்களுடன் அன்பான தொடர்பு முதலிலும் இருந்தாலும் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் என்னை அமீராகவும் நாஸிர் ஆலாவாகவும் நியமித்த நேரத்தில் அன்புடன் மரியாதையும் இணைந்து விட்டது. கலீஃபாவாக ஆன பிறகு இந்த தொடர்பில் ஒரு அற்புதமான

நிலை ஏற்பட்டது. அது மிகவும் ஆச்சரியத்திற்குரியதாக இருந்தது. மிகவும் மகிழ்வுடன் பழகக்கூடிய சிறந்த நல்லொழுக்கங்களைக் கொண்ட பெண்மணி ஆவார். அல்லாஹ் இவரது தர்ஜாவை உயர்த்துவானாக!

அஹ்மதி சிறு பெண் பிள்ளைகளான நாஸிராத்துகள் மீது ஒரு வகையில் இவர்களது கருணையும் உள்ளது. அது அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் பதிவும் செய்யப்பட்டுள்ளது. 1939 –ல் அஹ்மதி சிறு பிள்ளைகளுக்கான மஜ்லிஸ் நாஸிராத்துல் அஹ்மதிய்யா நிறுவப்பட்டது. இதற்கு முதல் பொறுப்பாளர் கண்ணியத்திற்குரிய ஆசிரியை மைமூனா சூஃபியா சாஹிபா ஆவார்கள். செயலராக சாஹிப்ஸாதி அமத்துர் ரஷீத் சாஹிபா தான் இருந்தார்கள். இந்த திட்டத்தை இவர்கள் தான் எடுத்துரைத்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: நான் மார்க்கக் கல்வி பயின்று வந்த போது என்னுடைய உள்ளத்தில் பெண்களுக்கு தஃலீம் வழங்குவதற்கு லஜ்னா இமாயில்லாஹ் என்ற அமைப்பு உள்ளது. இதனைப் போன்று சிறிய பெண் பிள்ளைகளுக்கு என்ற ஒரு மஜ்லிஸ் இருக்க வேண்டும் என தோன்றியது. இதன்படி கண்ணியத்திற்குரிய ஸயிபுர் ரஹ்மான் சாஹிப் உடைய மனைவி கண்ணியத்திற்குரிய ஹாஃபிஸ் பஷீருத்தீன் உபைதுல்லாஹ் சாஹிபுடைய மனைவி மற்றும் தனது வகுப்பின் ஒரு சில சகோதரிகளிடம் இதைப் பற்றி கூறினார்கள். நாங்கள் அனைவரும் சேர்ந்து சிறு பெண் பிள்ளைகளுக்கென்று ஒரு அஞ்சுமனை ஏற்படுத்தினோம். அதற்கு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய அனுமதியுடன் நாஸிராத்துல் அஹ்மதிய்யா எனப் பெயர் சூட்டப்பட்டது.

சம்பவம் இவ்வாறாகும். ஒரு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அந்த வழியே சென்றார்கள். அப்போது இது என்னவென்று கேட்டார்கள். அதற்கு நவ்ஜவான் லஜ்னா என்ற ஏதோவொரு பெயரைக் கூறி அஞ்சுமன் எனக் கூறினார்கள். அதற்கு ஹுஸூர் மறுத்து விட்டார்கள்.

பிறகு இவர்களது ஆசிரியருடைய வழிகாட்டலுக்கிணங்க அனுமதி பெற்றார்கள். அதன் பின்னர் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நாஸிராத்துல் அஹ்மதிய்யா எனப் பெயர் சூட்டினார்கள். இவர்களைப் பற்றி ஒவ்வொருவரும் இதனை தான் கூறுகின்றார்கள். அதாவது, மிகவும் எளிமையான ஏழைகளை பராமரிக்கக்கூடிய பெண் ஆவார்கள். இவர்களிடம் விருந்தோம்பல் பண்பு மிகவும் அதிகமாக காணப்பட்டது. குறிப்பாக ஜல்ஸா நாட்களில் தனது முழு வீட்டையும் விருந்தினர்களுக்காக கொடுத்து விட்டு ஒரு ஸ்டோரில் குடும்பத்தினர் அனைவரும் தங்கி வந்தனர். சில சமயங்களில் நானும் பார்த்திருக்கின்றேன். ஸ்டோரில் கூட கிடையாது.

மாறாக விருந்தினர்களுடைய பொறுப்பில் வீட்டைக் கொடுத்து விட்டு வெளியில் ஒரு கூடாரம் அமைத்து அதில் குடும்பத்தினருடன் தங்கி வந்தனர். விருந்தினர்களுக்கு மிகவும் அதிகமாக பணிவிடை செய்து வந்தார்கள். இது இவர்களிடம் இருந்த அசாதாரணமான பண்பு ஆகும். பணக்காரர்களும் ஏழைகளுக்கும் ஒரே மாதிரியான விருந்தோம்பல் தான் செய்து வந்தார்கள். ஏழைகளை பராமரிக்கக் கூடிய மிகவும் அனுதாபத்துடன் பழகக்கூடிய பெண்மணி ஆவார்கள்.

இவர்கள் வளர்த்த பிள்ளைகள் பலர் எங்களை தனது மகன், மகள் போன்று தான் வளர்த்தார்கள் எனக் கூறுகின்றனர். அவர்களுக்கு நல்ல பள்ளிக்கூடத்தில் கல்வி பயிற்றுவித்தார்கள். வீட்டில் நல்ல முறையில் வைத்திருந்தார்கள். நல்ல ஆடைகளை அணிவித்தார்கள். மேலும் அவர்களது உணவினை கவனத்தில் கொள்வார்கள். இவர்கள் பல அனாதைப் பிள்ளைகளுக்கு திருமண ஏற்பாட்டையும் செய்துள்ளார்கள். நான் இவர்களைப் போன்று ஏழைகளைப் பராமரிக்கக் கூடிய மக்களை மிகவும் குறைவாகவே பார்த்துள்ளேன். வீட்டில் ஏதாவது ஏழை அல்லது அனாதையை வளர்ப்பதற்கு பொறுப்பு எடுத்துக் கொண்டால் பிறகு அவர்களை தனது பிள்ளைகளைப் போன்று பார்த்து வந்தார்கள். அல்லாஹ் இவர்களது தர்ஜாவை உயர்த்துவானாக! கருணையுடனும் நடப்பானாக! இவர்களுக்கு மன்னிப்பை வழங்குவானாக! இவர்களுக்கு மூன்று மகள்கள் மற்றம் ஒரு மகன் உள்ளனர். மகன் டாக்டர் சஹீருத்தீன் மன்சூர் ஆவார். அனைவரும் அமெரிக்காவில் உள்ளனர்.

அல்லாஹ் இவர்களது பிள்ளைகளுக்கு தாய் தந்தையருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நன்மைகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at **BAITUL HUDA,** Australia

on **04.10.2013**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456